OPEN ACCESS

Manuscript ID:
TAM-06012021-4184

Volume: 6

Issue: 1

Month: July

Year: 2021

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 28.05.2021

Accepted: 29.06.2021

Published: 01.07.2021

Citation:
Periyasamy, B. "Biographies of the People of Kurinjila in the Sangam Akapadals." *Shanlax International Journal of Tamil Research*, vol. 6, no. 1, 2021, pp. 122–130.

DOI:
https://doi.org/10.34293/tamil.v6i1.4184

*Corresponding Author:
periyaswamydeva@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Biographies of the People of Kurinjila in the Sangam Akapadals

**B. Periyasamy**
*Head, Department of Tamil, D.L.R. College of Arts and Science*
*Villappakkam*
https://orcid.org/0000-0002-7395-9699

**Abstract -** The people of the Sangam period, who lived on the basis of land, were divided into small groups based on the occupation they carried out in the area in which they lived. There have been inequalities within them due to the industry and economy they have undertaken. Usually in the present context, while two brothers from the same family are rising and falling due to the quality of education or economic advancement, their future status as two brothers is bisexual, and they are inequitable on the basis of whether they are comfortable or not. It was in this context that the people of the Sangam period were subdivided on the basis of land and then divided into smaller sections on the basis of the occupation carried on in the land. In it, the article sets out to explore the lives of the people of Kurinji land with the help of Sangam Akapadal.

**Key Words:** Tamil Literature, Sangam Literature, Kurinji, Theme, Subject, Kurinji land people, Kuravar, Kanavar, Verpar

**References**

1. Kathirverpillai, N. (2011). *Tamil Mozhi Agarathi* – Sempathippu, Saratha Pathippagam, .
2. Saminathiyar, U.Ve., (2018). *Kurunthogai (Moolamum Uraiyum)*, Chennai, U.Ve. Saminathiyar Nool Nilayam,
3. Saminathiyar. U.Ve., (2018). *Pathuppattu moolamum Nachinikiniyaruraiyum*, Chennai, U.Ve. Saminathiyar Nool Nilayam.
4. Singaravelu. A. Abidhana Chintamani, Seethai Pathipagam, Chennai, ed. 8th edition.
5. Somasundaranar, P.V. (1979). (Urai) *Akananuru (Kalitriyanai)*, Chennai, Kazhaka Vezhiyedu.
6. Somasundaranar, P.V. (1977). *(Urai) Akananuru* (Manimidaipavalam Nithilakkovai), Chennai, Kazhaka Vezhiyedu.
7. Tamil Lexicon, (1963). Chennai, University of Chennai.
8. Duraisamyppillai Olavai. Su, (1978). *Ayngurunooru (Moolamum Uraiyum)*, Chidambaram, Annamalai University.
9. Tolkappiyanar, (1967). Tolkappiyam, Porulathigaram, Ilampuranar (Urai), Kazhaka Vezhiyedu, Chennai.
10. Natchinarkiniyar, (1978). *Kalithogai (Moolamum Uriyum)*, Chennai, Kazhaka Vezhiyedu.
11. (1968). Pingala Nikandu.

# சங்க அகப்பாடல்களில் குறிஞ்சிநில மக்களின் வாழ்வியல்

*முனைவர் பீ. பெரியசாமி*
தமிழ்த்துறைத் தலைவர்
டி.எல்.ஆர். கலை மற்றும் அறிவியல் கல்லூரி
விளாப்பாக்கம்

***ஆய்வுச்சுருக்கம்***

*நிலத்தின் அடிப்படையில் பகுக்கப்பட்டு வாழ்ந்த சங்க கால மக்கள், தாங்கள் வாழும் பகுதியில் மேற்கொள்ளும் தொழிலின் அடிப்படையில் சிறு சிறு குழுக்களாகப் பிரிந்து அக்குழுவின் பெயர் பெற்றிருந்தனர். அவர்கள் மேற்கொண்ட தொழிலினாலும், பொருளாதாரத்தினாலும் அவர்களுக்குள்ளேயே ஏற்றத்தாழ்வுகள் இருந்திருக்கின்றன. சங்க காலத்து மக்களிடள் நிலத்தின் அடிப்படையில் பகுக்கப்பட்டு, பின்னர் அந்நிலத்தில் மேற்கொள்ளப்படும் தொழிலின் அடிப்படையில் சிறு சிறு பிரிவுகளாகப் பிரிந்தனர். அதில், குறிஞ்சிநில மக்களின் வாழ்வியலை சங்க அகப்பாடலைக் கொண்டு ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.*

***முக்கியச்சொற்கள்:*** *சங்க இலக்கியம், தமிழிலக்கியம், குறிஞ்சி, கருப்பொருள், உரிப்பொருள், குறிஞ்சி நில மக்கள், குறவர், கானவர், வெற்பர்*

## முன்னுரை

தமிழ்மொழியில் மக்கள் வாழ்க்கை முறைக்கும் உரியதான இலக்கியம் படைப்பதற்குரிய இலக்கணமாகப் பொருளிலக்கணத்தை இயற்றியுள்ளனர். தமிழ் இலக்கியங்களுக்குப் பாடுபொருளாக அமைந்த பொருளை, அகப் பொருள், புறப் பொருள் என இருவகைப்படுத்துவர். “ஒத்த அன்புடைய - தலைவன் தலைவியின் உள்ளத்திற்கு மட்டுமே புலன் ஆகும் இன்ப நிகழ்வை” அகப் பொருள் என்பர். பிறருக்குக் கூறக்கூடியதாய் அமைந்த அறம், பொருள், அவற்றின் நிலையின்மை, வீடுபேறு ஆகியவற்றைப் பற்றிக் கூறுவது புறப்பொருள் ஆகும். “தாமே மகிழ்வது”;.

## அகத்திணையியலும் அன்பின் ஐந்திணைகளும்

அகத்திணை என்பது தமிழர் கண்ட காதல் நெறியாகும். இந்நெறி கொள்கைகளே திணை என்ற பெயரில் விளக்கப்பட்டுள்ளன.

**கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்**
**முற்படக் கிளந்த எழுதிணை என்ப**

**(அகத்.1)**

என்ற நூற்பா கைக்கிளை முதலாகப் பெருந்திணை இறுதியாக உள்ள அகத் திணைகள் ஏழு என்று கூறுகிறது. அவையாவன, கைக்கிளை, முல்லை, குறிஞ்சி, பாலை, மருதம், நெய்தல், பெருந்திணை ஆகும்.

நடுவண் ஐந்திணையுள் நிலம் பெறுவன: முல்லை, குறிஞ்சி, பாலை, மருதம், நெய்தல் என்ற நடுவண் ஐந்திணையுள் நடுவதாகிய பாலை ஒழிய ஏனைய நான்கும் நிலம் பெறும் இயல்பினை உடைத்து, இச்செய்திகளை, அவற்றுள்

**நடுவண் ஐந்திணை நடுவண தொழியப்**
**படுதிரை வையம் பாத்திய பண்பே**

**(அகத்.2)**

என்ற நூற்பா விளக்குகின்றது.

**சங்க இலக்கிய மக்கட் பாகுபாடு**

சங்க இலக்கியத்தில் ஐந்து வகையான நிலக் கூறுகளிலும் தனித்தனிக் குழுவினப் பெயர்கள் காண முடிகின்றது. குறிஞ்சி நிலத்தில் குறவர், கானவர், வேட்டுவர், புனைவர், கொடிச்சியர் எனக் குறிஞ்சி நில மக்கட் பாகுபாட்டினைச் சங்கப்பாடல்கள் விளக்குகின்றன. முல்லை நிலத்தில் ஆயர், குடத்தி, இடையர், அண்டர் என்ற பாகுபாடும், மள்ளர், உழவர், வினைஞர், மள்ளத்தியர், உழத்தி, கடைஞர், கடைசியர் என்ற மருதநில மக்களின் பாகுபாடும், பரதவர், நுளையர், வலைஞர், அளவர், திமிலர், அடலர், நுளைத்தியர் என்று நெய்தல் நிலமக்களின் பாகுபாடு, மறவர், எயினர், எயிற்றியர், என்று பாலை நில மக்கட் பாகுபாடு சங்க இலக்கியங்களில் வெளிப்படுகின்றன.

**குறிஞ்சித் திணை**

அகப்பாடல்களில் பொருள் முறைமை: சான்றோர் செய்யுளகத்து இடம்பெறும் அகப்பொருள் முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள், என்று மூன்று வகைப்படும். இந்த மூன்றின் அடிப்படையில் பாடல் பொருள் சிறப்பிக்கப்பெறும் என்பதனை,

**முதல்கரு உரிப்பொருள் என்ற மூன்றே**
**நுவலுங்காலை முறைசிறந் தனவே**
**பாடலுள் பயின்றவை நாடுங் காலை**
***(அகத். 3)***

என்று உரைத்துள்ளார் தொல்காப்பியர்.

**முதற்பொருள்**

**முதல் எனப்படுவது நிலம்பொழுது இரண்டின்**
**இயல்பென மொழிப இயல்பு உணர்ந்தோரே (அகத்.4)**

என்ற நூற்பாவில், நிலம் பொழுது(காலம்) இவற்றின் இயல்புகளைக் கூறுவது முதல் பொருளாகும். அவற்றுள் நிலமாவது காடுறை உலகம், மைவரை உலகம், தீம்புனல் உலகம், பெருமணல் உலகம் என்று நில இயலின் அடிப்படையில் நான்காகப் பகுக்கப்பெற்றுள்ளது. அவை முறையே முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என பெயர்பெற்றன. நிலங்களின் பெயரினைச் சுட்டுகின்ற ஆசிரியர் அவற்றை அந்நிலங்களுக்குரிய தெய்வங்களோடு இணைத்துச் சுட்டுகின்ற நிலம் நோக் குதற்குரியது. அவற்றை அந்நிலங்களுக்குரிய தெய்வங்களோடு இணைத்துச் சுட்டுகின்ற நிலம் நோக்குதற்குரியது.

**நிலம்** - மலையும் மலையைச் சார்ந்த இடமும்

**பொழுது** - அ) பெரும்பொழுது - கூதிர்காலமும், முன்பனிக்காலமும், ஆ) சிறு பொழுது - யாமம்

ஒவ்வொரு திணைக்கும் உரிய பெரும்பொழுது மற்றும் சிறுபொழுது களைத் தொல்காப்பியர் ஏழு நூற்பாக்களில் அமைத்துள்ளார் அவையாவன:

**காரும் மாலையும் முல்லை. குறிஞ்சி,**
**கூதிர் யாமம் என்மனார் புலவர்**
**பனிஎதிர் பருவமும் உரித்தென மொழிப**
**வைகறை விடியல் மருதம். எற்பாடு**
**நெய்தல் ஆதல் மெய்பெறத் தோன்றும்.**
**நடுவுநிலைத் திணையே நண்பகல் வேனிலோடு**
**முடிவுநிலை மருங்கின் முன்னிய நெறித்தே**
**பின்பனிதானும் உரித்தென மொழிப**
***(அகம்.6 -12)***

திணை பெரும்பொழுது சிறுபொழுது 1. முல்லை கார்காலம் மாலை (ஆவணி, புரட்டாசி) 2. குறிஞ்சி கூதிர்(ஐப்பசி, கார்த் திகை) முன்பனி (மார்கழி, தை) யாமம் 3. மருதம் கார், கூதிர், முன்பனி, பின்பனி (மாசி, பங்குனி) இளவேனில் (சித்திரை, வைகாசி) வைகறை 4. நெய்தல் பெரும்பொழுது கள் எற்பாடு 5. பாலை இளவேனில்,முது வேனில் (ஆனி, ஆடி) பின்பனி நண்பகல்

பொழுதுகள் ஐந்திணைக்கும் பொருந்து மாற்றை இளம்பூரணர் இன்னவாறு விளக்குகிறார்.

### குறிஞ்சி, கூதிர், யாமம்

குறிஞ்சிக்குப் பெரும்பான்மையும் களவிற்புணர்ச்சியே ஒழுக்கம் ஆகும். இப்புணர்ச்சிக்குத் தனியிடம் வேண்டும். கூதிர் காலத்தில் பகலும் இரவும் நுண்நுளி சிதறுவதால் ஆங்கு இயங்குவோர் இலர். அச்சூழலில் தலைவனும், தலைவியும் சந்தித்தல் எளிதாயிற்று. யாமப் பொழுதினும் இயங்குவார் இலர். அப்போது புணர்ச்சிக்கு வாய்ப்பு மிகுதி எளிது. எனவே கூதிர், யாமம் குறிஞ்சிக்காயிற்று.

### கருப்பொருள்கள்

1. தெய்வம் - சேயோன்
2. உணவு - ஐவன நெல் (மலை நெல்), தினை, மூங்கிலரிசி, கிழங்கு
3. விலங்கு - புலி, யானை, கரடி, பன்றி
4. மரம் - அகில், ஆரம், தேக்கு, வேங்கை
5. பறவை - கிளி, மயில்
6. பறை - முருகியம், தொண்டகப் பறை
7. தொழில் - தேனெடுத்தல், கிழங்கு அகழ்தல், தினை விதைத்தல், வேட்டையாடுதல்
8. யாழ் - குறிஞ்சி யாழ்
9. பண் - குறிஞ்சிப் பண்
10. ஊர் - சிறுகுடி, குறிச்சி
11. நீர் - அருவி நீர், சுனை நீர்
12. மலர் - காந்தள், வேங்கை, குறிஞ்சி

**கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு**
**பெருந்தேன் இழைக்கும் நாடனொடு**
**நட்பே (குறுந்-3)**

என்ற வரிகள் மலையும் மலைசார்ந்த பகுதியாகிய குறிஞ்சிக்குக் குறிஞ்சி மலர் சிறந்தது என உணர்த்துகிறது.

### உரிப்பொருள்

புணர்தலும் புணர்தல் நிமித்தமும் (நிமித்தம் = காரணம்)

### குறிஞ்சி நிலமக்கள்

குறிஞ்சி நிலத்தில் வாழும் மக்களாக குன்றவர், புனைவர் போன்றோரையெல்லாம் குறிப்பிட்டாலும் குறவர், கானவர், வேட்டுவர், கொடிச்சியரைப் பற்றிய செய்திகளே பெரும்பான்மையாகக் காணப்படுகின்றன. புனைவர் "புனைவர்" என்று குறிஞ்சி நிலத்திற்குரியவராகக் குறிப்பிடப்படும் பாடல்களில் 'தினை' விளைதலுக்கு ஏற்பக் காட்டைத் திருத்துவோரைக் குறிப்பதாகவே "புனைவர்' என்ற ஓர் இனச்சொல் பல பாடல்களில் அறிமுகம் செய்யப்படுகிறது. இதனை,

**புனைவன் துடவைப் பொன்போல்**
**சிறுதினை[1] (குறுந். 133)**

என்ற குறுந்தொகை வரி, "தினைப்புனத்தை முயன்று ஆக்கியவனான நம் தலைவனின் தோட்டத்தில் பொன் போன்று தினைக் கதிர்கள் காணப்படுகின்றன' என்று தலைவி கூறுவதாக அமையும் இப்பாடலில் புதிதான தோட்டத்தை உருவாக்கி, அதில் தினையை விளைவித்திருப்பவன் என்ற பொருளில் "புனைவர்' என்ற பெயர்ச் சொல் கையாண்டிருக்கிறார் புலவர். இப்புனைவர் என்ற பெயர்ச் சொல் சங்க இலக்கியத்தில் பெரும்பான்மையாகப் பயன்படுத்தவில்லை, இருப்பினும் சில இடங்களில் குறவர் என்ற இனத்தின் செயல்பாடுகளையே பெயரில் மட்டுமே மாற்றங்கொண்டு பாடலாசிரியர் "பா' புனைந்திருக்கின்றார்.

**குறவர்**

குறிஞ்சி நில வருணனையில் முக்கிய இடம் வகிக்கும் இனமாக, குறவர் குறத்தியர் பற்றியதான செய்திகள் மிகுதியாகக் காணப்படுகின்றன. குறிஞ்சி நில வருணனையாக வேங்கை மரத்தின் மலர்களைச்சுட்டிக் காட்டி, அம்மரத்தின் மலர்களைக் குறமகளிர் சூடிக் கொள்வர் என்பதனை,

**ஒன்றேன்அல்லேன்; ஒன்று வென்குன்றத்துப்**
**பொருகளிறுமிதித்தநெரிதாள் வேங்கை**
**குறவர் மகளிர் கூந்தற்பெய்ம்மார்**
**நின்று கொய்ய மலரும்நாடனொடு**
**ஒன்றேன்............. (குறுந்.208)**

என்ற குறுந்தொகைப்பாடலில், குன்றின் கண்ணுள்ள யானைகள் தம்மோடு மோதிக்கொண்டதனால் அருகிலிருந்த வேங்கை மரம் கீழே சாய்ந்தது. அவ்வாறு மரம் சாய்ந்ததனால் குறவர் குலப் பெண்கள் நின்றவாறே மலர்களைப் பறித்துக் கொண்டனர்' என்று கூறுவதில் குறிஞ்சி நிலத்தில் குறவர்கள்வாழ்ந்தனர் என்ற செய்தியை அறிய முடிகின்றது.

இதனைப்போன்றே, ஐங்குறுநூறு பாடலொன்றும் குறிப்பிடுகிறது.

**குன்றக் குறவன் ஆர்பின் எழிலி**
**நுண் பல் அழிதுளிபொழியும் நாட**
**நெடுவரைப் படப்பை நும்ஊர்க்**
**கடுவரல் அருவி காணினும்அழுமே**
**(ஐங்.251)**

என்ற பாடலில், குன்றின்கண் வாழும் குறவன் ஆரவாரம் செய்வதால் வான்முகில் நுண்ணிய பலவாகிய மழைத்துளிகளை மிகுதியாகப் பொழிவதற்கு இடமான மலை நாடனே நெடிய மலைக்கண் உள்ள தோட்டங்கள் பொருந்திய நும்ஊரிலிருந்து விரைந்து ஓடிவரும்அருவியைக் கண்டாலும் என் தோழி கண்கலங்கி அழுகின்றாள்" என்று கூறுவதில், "குன்றில் உள்ள குறவன் ஆர்ப்பரிக்கின்றான் என்று கூறுவதில், இரவு நேரங்களில், யானைகளிடமிருந்தும், பன்றிகளிடமிருந்தும் தினைப்புனத்தைக் காத்தற்காக ஓயாமல் கத்திக்கொண்டிருப்பான் என்ற நிலையினை இது விளக்குகிறது. பொதுவாக, குறிஞ்சி நிலத்து குறவர்களின் வாழ்வாகப் பகற்பொழுது இல்லத்து மகளிர் அல்லது வயதிற்கு வந்த பெண்கள் தினைப்புனத்தைக் காத்தலும், அத்தினைப் புனத்தை இரவு நேரங்களில் குறவர்கள் காத்ததைப் பற்றியதுமான செய்திகளே கிடைக்கின்றன.

**சுனைப் பூங்குவளைத் தொடலை தந்தும்**
**தினைப்புன மருங்கில் படுகிளி ஓப்பும்**
**(குறுந்.346)**

என்ற குறுந்தொகைப் பாடல்வரியில், "மலைநாட்டுத் தலைவன், பகற்பொழுதே, வந்து தினைப்புனம் காத்திருக்கும் உனக்கு, சுனையில் பூத்த குவளை மலர்களை மாலையாகத்தொடுத்துத் தந்தான்" என்பதில் பகற்பொழுதே மகளிர் தினைப் புனத்தைக் காத்தமையை விளக்குகிறது. இதனைப்போன்றே இரவு நேரங்களில் ஆடவர் தினைப்புனம் காத்தனர்,

**இடி உமிழ்புஇரங்கியவிரவுபெயல்நடு நாள்**
**கொடி விடுபுஇருளிய மின்னும் செய் விளக்கத்து**
**பிடியொடுமேயும் புன்செய் யானை**
**அடி ஒதுங்கு இயக்கம் கேட்ட கானவன்**
**நெடுவரைஆசினிப்பணவை ஏறி**
**கடுவிசைக்கவணையில் கல் கை விடுதலின்**
**பலவின்பழத்துள் தங்கும்**
**மலைகெழுவெற்பனைப் பாடுகம்.**
**(கலி.41)**

என்ற கலித்தொகை வரிகளில், "இடி இடித்து, நெருப்பை உமிழ்ந்து எவ்விடத்தும் சென்று கலக்கும் மழை பெய்த இருண்ட நடு இரவுக்காலத்தே, ஒழுங்குவிட்ட மின்னல் உண்டாக்கியஒளியிலே, ஆண் யானை பெண்யானையுடன் புன்செய் நிலத்திலே புகுந்து பயிரைத் தின்னும். அவற்றின்

காலடிச் சத்தம் கேட்ட கானவன் உயர்ந்த மலையில் பலா மரத்தோடு சேர்த்துக் கட்டியபரணிலே ஏறி, தினைப்பயிர்களைத் தின்று கொண்டிருக்கும் யானைகளைத் துரத்துவதற்காக கவணிலே கல் வைத்து எறிந்தான். எறிந்த அக்கல் மலைச்சரிவிலே உள்ள வேங்கை மரத்தில் மோதி, வேங்கை மலர்கள் உதிர்ந்தன, அதன்பின் தேனினம் உருவாக்கிய இறாலைத் துளை உண்டாகும்படி துளைத்தது, மணமுடைய மாவினது பசிய கொத்துக்களை உலுக்கியது, குலையை உடைய வாழையின் கொழுவிய மடலைக் கிழித்தது, பின்னர்ப் பலாவின் பழத்துள்ளே தங்கியது என்று கூறுவதில் இரவு நேரங்களில் ஆடவர் தினைப்புனம் காத்தசெய்தியினை அறிய முடிகிறது. குறிஞ்சி நிலத்து மக்களான குறவரின் தொழில் தினைப்புனத்தை உருவாக்குதல், தினைப்புனததைக் காத்தல், கதிர் அறுத்தல் என்ற நிலையே அவர்களின் வாழ்வில் முதன்மைத் தொழிலாக இருந்திருக்கிறது.

### கானவர்

குறிஞ்சி நிலத்தில் காணப்படும் மற்றொரு இனத்தார் கானவர். இவ்வினத்தார் குறவர்களிலிருந்து சற்று வேறுபடுகின்றனர். பொதுவாகக் குறிஞ்சி நிலத்து மக்களின் தொழிலைக்குறிக்கின்றஇலக்கிய வரலாற்று ஆசிரியர்கள், தினைப்புனம் காத்தல், தேனெடுத்தல், கிழங்கு அகழ்தல், வேட்யைாடுதல், என்று உணர்த்துவர். அந்நிலத்து மக்களின் வாழ்க்கை முறையினைப் பற்றி ஆய்கையில், குறவர் தினைப்புனம் காக்கும் தொழிலை முதன்மைத்தொழிலாகவும், கானவர் மற்ற தொழிலான தேனெடுத்தல், கிழங்கு அகழ்தல், வேட்டையாடுதல் போன்ற தொழிலை மேற்கொண்டவர்களாகவும் விளங்கினர் என்பது தெரிய வருகின்றது. இம்மக்கள் வேட்டையாடுதலில் ஆர்வத்துடன் ஈடுபட்டனர்,

***தீயின்அன்னஒண்செங்காந்தள்***
***தேனினர்கிழங்கினர் ஊன் ஆர்வட்டியர்***
***சிறுகட்பன்றிப்பழுதுளிபோக்கி***
***பொருதுதொலையானைக் கோடு சீர் ஆக***
***தூவொடுமலிந்தகாயகானவர்***
***செழும்பல்யாணர்ச்சிறுகுடிப்படினே***
***இடும்போர்ஒக்கலொடு பதம்மிகப்***
***பெருகுவீர் (மலை.படு. 145-157)***

என்ற மலைப்படுகடாம் பாடல்வரிகளில், “மணம் கமழ் மலைப் பக்கத்தே சிறுகுடியில் வாழும் கானவரிடத்து செல்வீரானால், தேனினையும், கிழங்கு வகைகளையும், பன்றி இறைச்சியினையும் உண்ணத் தருவார்கள் என்பதனையும், கானவர் வேட்டையாடிக் கொண்டுவந்த பொருட்கள் யாவற்றையும் யானைக் கொம்பினைக் காவுமரமாகக் கொண்டு அவற்றில் தொங்க விடுவர் என்று கூறுவதில் கானவர் வேட்டையாடிய பொருட்களையே உணவாகக் கொண்டனர் என்பது தெரிய வருகிறது. கானவர் இனத்தவர்கள் கிழங்கு அகழ்ந்து, அக்கிழங்குகளை உணவாகக் கொண்டனர்,

***அன்னாய் வாழி வேண்டன்னைகானவர்***
***கிழங்கு அகழ் நெடுங்குழி மல்க வேங்கைப்***
***பொன் மலிபுதுவீதாம்அவர்நாட்டு***
***மணி நிறமால்வரைமறைதொறு இவள்***
***அரைமலர்நெடுங் கண் ஆர்ந்தன பனியே***
***(ஐங்.208)***

என்ற ஐங்குறுநூற்றுப்பாடலில், “மலை நாட்டில் உள்ள தலைவனைப் பிரிகையில் தலைவியின் கண்கள் குளத்திலுள்ள குவளை மலர் போன்று கண்ணீரில் மிதக்கிறது என்பதனை உணர்த்துவதற்கு, மலைநாட்டின் சிறப்பாக கானவர்களால் வள்ளிக் கிழங்கும் கவலைக் கிழங்கும் தோண்டியெடுப்பதனால் அம்மலை நாட்டில் குழிகள் மிகுதியாகக் காணப்படுகின்றன. அக்குழிகள் தோறும் வேங்கை மலர்கள் நிறைந்திருக்கின்றன. அத்தகைய சிறப்பு மிக்க மலைநாட்டிற்குத் தலைவன் நம்மைப்

பிரிந்து சென்றான்" என்பதில்கானவர்கள் கிழங்கு அகழ்ந்து அதனை உணவாகக் கொண்டனர் என்ற செய்தி கிடைக்கின்றது. மேற்கண்ட குறவர்கானவர் என்ற இரு இனங்களுக்குள் பொதுத் தன்மையும் இருக்கின்றது. குறவர் வேட்டையாடுதலைப் போன்றும், கானவர் தினைப்புனம் காத்தலைப் போன்றும் பல பாடல்கள் இருக்கின்றன. இதனைப் பற்றி குறுந்தொகைப் பாடலான,

**சுடுபுனமருங்கில்கலித்தஏனற்**
**படுகிளிகடியும்கொடிச்சிகைக்குளிரே**
**இசையின் இசையா இன்பாணித்தே**
***(குறுந்.291)***

என்ற வரிகளில், 'காடுகளை எரித்து உண்டாக்கிய கொல்லைப் பகுதியில் செழித்து வளர்ந்துள்ள தினைகளில் விழும் கிளிகள், தம்மை ஓட்டுகின்ற கொடிச்சியின் இசையில் ஈடுபட்டு, அவள் கையிலுள்ள தம்மைக்கடியும் குளிர்ந்த என்னும் கருவி, கேட்பதற்கு இனிய தாளத்தை உடையது" என்று கூறுவதில் காடு களை அழித்து தினை விதைத்து அதனைக் காத்திருக்கின்றனர் கானவர் என்ற செய்தி கிடைக்கின்றது. இவ்விலக்கியச் சான்றாதாரங்களைக் கொண்டு கானவர்களும் தினை விளைவித்து வாழும் வாழ்க்கையினை மேற்கொண்டனர் என்றும், குறவர்களும் இவர்களும் ஒரு சமூகத்தினரே என்று கூறிவிடுவதற்கு இல்லை.

குறிஞ்சி நிலத்தில் இரு சமூகத்தினர் வாழ்ந்தனர் என்பதனை, குறவர்- குறத்தியர் என்பது குடும்பத் தலைவன் குடும்பத் தலைவி என்ற நிலையிலும், கானவன் - கொடிச்சி என்ற இருவர் ஒரு குடும்பத்தில் தலைவன், தலைவி என்ற நிலையிலுமே குறிஞ்சி நிலப் பாடல்கள் காணப்படுகின்றன. குறவன், குறமகள் என்பவற்றுள் குறமகள் என்பது குறவர் இனத்ததைச் சார்ந்த பெண் என்பது எளிதாக விளங்கும் நிலையில், கானவன்-கொடிச்சியர் என்பதில் பெயர் மாற்றம் காணப்படுகின்றது.

**மரம் கொல் கானவன் புனம் துளர்ந்து வித்திய**
**பிறங்கு குரல் இறடி காக்கும், புறம் தாழ் அம்சில் ஓதி அசைஇயல் கொடிச்சி**
***(குறுந்.214)***

என்ற குறுந்தொகைப்பாடலில், 'கானவன் மரங்களை வெட்டித் தினைப்புனம் உருவாக்கி, அதில் தினை விதைகள், முற்றிய காலத்து கொடிச்சி காவல் புரிவாள் என்பதும்,

**களிற்றமுகம் திறந்த கவுளுடையப் பகழி வால்நிணப்புகவின், கானவர் தங்கை அம்பணை மென்தோள்ஆய் இதழ்மழைக் கண் ஒல்கு இயற்கொடிச்சியை நல்கினை ஆயின் *(அகம்.132)***

என்ற அகநானூற்றுப் பாடல் வரிகளில், "மதங்கொண்ட யானையின் கன்னத்தையுடைய முகத்தைக் கிழித்த அம்பினையும், வெண்மையான கொழுப்புடன் கூடிய உணவினையும் உடைய வேடரின் தங்கையே" என்பவற்றில் கானவரின் தங்கை என்று உறவு முறை வெளிப்படுவதாலும், கானவரும் கொடிச்சியரும் ஒரு சமூகத்தவர் என்பது விளங்குகிறது. இவற்றினை அடிப்படையாகக்கொண்டு குறிஞ்சி நிலத்தில் கானவர், குறவர், என்ற இரு குடிகள் வாழ்ந்திருக்கின்றனர் என்பது தெள்ளத் தெளிவாகத் தெரிகின்றது. இவர்களுக்குள் தொழில் அடிப்படையில், பொருளாதாரத்தின் அடிப்படையிலுமே, அதாவது குறவர்கள் நல்ல விளைநிலங்களைக் கொண்டவர்களாகவும், தேவைக்கேற்ப வேட்டையாடுபவர்களாகவும், கானவர்கள் தேவைக்கேற்ப விளைநிலங்களை உருவாக்கியவர்களாகவம், வேட்டையாடுதலையே முதன்மைத் தொழிலாகவும் கொண்டிருந்தனர் என்ற அடிப்படையிலேயே இவர்களுக்குள் வேற்றுமைக் காணப்படுகின்றது. கானவர் என்ற இனத்தவர்கள் வேட்டைச் சிறப்பால் வேட்டுவர் என்றழைக்கும் வழக்கமும் இருந்திருக்கிறது.

இவ்விரண்டு குடிமக்களிடத்தே பூசல் நேர்ந்ததாகவோ, இவர்களுக்குள் கருத்து

வேற்றுமைத் தோன்றியதாகவோ செய்திகள் காணவில்லை. இம்மக்கள் குறிஞ்சி நிலத்தில் இயல்பான வாழ்க்கையையே மேற்கொண்டவராகவே இருக்கின்றனர்.

### வெற்பன்

இயல்பான வாழ்வினை மேற்கொண்ட கானவர், குறவர்மக்களிடத்தே, தலைமைப் பண்பு வாய்ந்தவர்களாக வெற்பன் என்ற சொல் ஆங்காங்கே குறிஞ்சி நிலத்தினை ஒட்டி கையாளப்படுகின்றது. வெற்பன் என்பது ஓரினமாக இருந்தது என்று கூறுவதற்கில்லை, இருப்பினும் குறிஞ்சி நிலத்தில் தலைமைப் பண்பு வகித்த நாட்டுத் தலைவனாக இருந்திருக்க வாய்ப்பிருக்கின்றது. இதனைப்பற்றிக் கூறும் குறுந்தொகைப் பாடல் குறிப்பிடுகிறது,

> **“காந்தள்அம்கொழுமுகை காவல் செல்லாது,**
> **வண்டுவாய்திறக்கும்பொழுதில்பண்டும்**
> **தாம்அறிசெம்மைச்சான்றோர்க் கண்ட**
> **கடன்அறி மாக்கள் போல இடன்விட்டு**
> **இதழ்தளைஅவிழ்ந்த ஏகல் வெற்பன்**
> **நன்னர்நெஞ்சத்தான் – தோழி**
> **(குறுந்.265)**

என்ற பாடல் வரிகளில், ‘காந்தளின் அழகிய கொழுவிய முகை தானே இதழ்விரியும் வரை வண்டுகளைக் காத்திருக்க வைக்காமல் மலர்ந்து முன்பே தாம் அறிந்த நடுநிலையுடைய சான்றோரைக் கண்ட அளவிலேயே முகமலர்ந்து, இடனளித்து அவரைத் தாழ்க்க வைக்காமல் தன்கண் உள்ள இனியன உதவும் கடமைகளை அறிந்தமாந்தர்போலக்காந்தள்முகைவண்டு களைத் தன்பால் வரக்கண்ட அளவிலேயே, இதழ்களை விரித்து தன்னிடம் உள்ள தேனைத் தந்து தங்குவதற்கும் இடனளித்து உதவிற்று. அத்தகைய உயர்ந்த மலைகளையுடையஇந்நாட்டின் தலைவன் நின்னைவரைந்து கொள்ள வேண்டும் என்ற நல்ல நெஞ்சத்தை உடையவன்’ என்பதில் மலைநாட்டுத் தலைவன் “வெற்பன்” என்று பொருளில் வெளிப்படுகின்றது.

> **பலவின்பழத்துள் தங்கும் மலைகெழுவெற்பனைப்**
> **பாடுகம், வா–வாழி தோழி ! நல்தோழி**
> **!பாடுற்று (கலி.41)**

என்ற கலித்தொகைப் பாடல் வரிகளில், ‘மூங்கில் நெல்லைகுற்றிவள்ளைப் பாட்டுப் பாடிக்கொண்டிருக்கும் மகளிர், குறிஞ்சி நிலத்தின் செழிப்பினை உணர்த்தி அத்தகைய நாட்டிற்கு தலைவனாகிய வெற்பனைப் பாடுவோம் வா என்று தோழியை அழைப்பதாக அமைகின்றன.

### முடிவுரை

சங்க காலத்தில், இனக்குழு வாழ்க்கை முறையினையே மேற்கொண்டனர். இவ்வினக் குழுவின் தொடக்க நிலையும் மனித வளர்ச்சி பெறாத, இயற்கையோடு இயற்கையாய், விலங்குகளோடு விலங்காய் வாழ்ந்த மனிதன், தன்னை விலங்குகளிடமிருந்து காத்துக் கொள்ள குறிஞ்சி நிலக்குன்றுகளில் மறைந்து வாழத் தொடங்கியிருத்தல் வேண்டும். குறிஞ்சி நிலத்தில் வாழ்ந்த மனித இனத்தின் வளர்ச்சி நிலைதான், அம்மக்களுக்குள்ளேயே விளைவித்து வாழ்பவர். வேட்டைச் சமூகம் என்ற நிலை தோன்றியது. விளைவித்து வாழ்ந்தவர்கள் தங்களின் வாழிடத்தைச் சமவெளியாக மாற்றும் முயற்சியால் முல்லை நிலம் உருவாகிறது. அங்கே ஆநிரைகளை வளர்க்கும் பாங்கும் ஆநிரைகளே அக்காலச் செல்வங்களாகவும், மலர்ச்சியுறுகின்றன. குறிஞ்சி நிலத்திலே வேட்டைச் சமூகமாய் வாழ்ந்தவர்களின் வம்சா வழியினராக எயினர், மறவர், போன்ற வில்லாளிகள் உருவாகின்றனர்.

### துணை நூற்பட்டியல்

1. கதிரைவேற்பிள்ளை. நா, தமிழ் மொழி அகராதி – செம்பதிப்பு, சாரதா பதிப்பகம், சென்னை. 2011.

2. சாமிநாதையர். உ.வே., குறுந்தொகை (மூலமும் உரையும்), உ.வே. சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை, 2018.
3. சாமிநாதையர். உ.வே., பத்துப்பாட்டு மூலமும் நச்சினார்க்கினியாருரையும், உ.வே. சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை, 2018.
4. சிங்காரவேலு. ஆ, அபிதான சிந்தாமணி, சீதைபதிப்பகம், சென்னை. பதி. 8ஆம் பதிப்பு.
5. சோமசுந்தரனார். பொ. வே. (உரை) அகநானூறு (களிற்றியானை), கழக வெளியீடு, சென்னை, 1979.
6. சோமசுந்தரனார். பொ. வே. (உரை), அகநானூறு, (மணிமிடைப்பவளம், நித்திலக் கோவை), கழக வெளியீடு, சென்னை, 1977.
7. தமிழ் லெக்சிகன், சென்னை பல்கலைக் கழகம், சென்னை, 1963.
8. துரைசாமிப்பிள்ளை ஔவை.சு, ஐங்குறுநூறு (மூலமும் உரையும்), அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம், 1978.
9. தொல்காப்பியனார், தொல்காப்பியம், பொருளதிகாரம், இளம்பூரணர் (உரை), கழக வெளியீடு, சென்னை, 1967.
10. நச்சினார்க்கினியர், கலித்தொகை (மூலமும் உரையும்), கழக வெளியீடு, சென்னை,1978.
11. பிங்கல நிகண்டு, 1968.